TAMIL NADU ARCHIVES LIBRARY

Acc.No:	181992
Title:	நவரத்ந கீர்த்தன மஞ்சரி - இரண்டாம் பாகம்
Vol: —	No: — Month&Year: —
Author:	ஸ்ரீமான் [illegible] ராமச்சந்திரராவ் அவர்கள்
Year & Publication	1925 - பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஜில்லா.
Call No:	Q7:417 N25.2.
Total Pages:	iv + 28
Missing Pages:	—
Date of Lamination:	28/10/14
Preservation Clerk Sign:	T.SENTHIL NAYAKI
Remarks(if any):	
Librarian	[signature] 28/10/14

786

காத்திமுல்லன்பியா நபி முகம்மது முஸ்தபா
ரசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லம்
அவர்கள் பேரில் பாடிய

அற்புத வர்ணமெட்டுகளடங்கிய

நவரசக்

கீர்த்தனை மஞ்சரி.

(இரண்டாம் பாகம்.)

இஃது

பத்தமடை, ஸ்ரீமான். கலங்காலெப்பையாகான் ராவுத்தர்
அவர்கள் குமாரர் சங்கீத வித்வான்,
ஸ்ரீமான். முத்துக்கனி ராவுத்தரவர்களாலியற்றி
மேலச் செவல் மகா-௱-௱-ஸ்ரீ
பு. பாவாசா சாஹிபு ராவுத்தரவர்கள் குமாரரும்,
சிறுவெண்பாப்புலிப் பாவலருமான
பாவா முகைதீன் புலவரவர்களால் பார்வையிட்டு,

திருநெல்வேலி,
மீராணியா ப்ரெஸில்; பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Registered.

இதன் விலை] காப்பி 2000. [அணா 6.

1925.

18/1962

பத்தமடை, மகா-ா-ா-ஸ்ரீ மெஞ்ஞான சொரூபராகிய
செய்குகாமில் செய்யது முகம்மது காசீம் லெப்பை ஆலீம்
சாகிப் அவர்களியற்றிய சாற்றுக்கவி.

முத்தொளிவதான பரஞ்சோதியே சொரூபமாய் முச்சுடரும் தானாகியே
மூவ்வுலகரசாளும் முகம்மதுற்றருள்பேரில் மௌனவழி ஆதியாமென
பத்தமடை நகர் வாழும் முத்துக்கனி பாணர் பகர்ந்த நவரசக் கீர்த்தனை
பாக்கிய சிலாக்கியமாய் பாவலர்கள் கொண்டாடும் பண்பானவின்பரசமாம்
சுத்தமாயன்னகரில் வாள் சுலையுமான்புதல்வர் சோதனை சீர்திருத்தினர்
சுகமான புகழதை அகமகிழ்ந் தெல்லோரும் துயர்தீரவே படிப்பீர்
நித்தியம் விளக்கியும் மனித்யமதை நாடாத நிபுணர்கள் மெச்ச கவியாய்
நிலவிசை நிகரிலாதானந்தக் கீர்த்தனையும் நீடூழி வாழ்கவன்றே.

மேலப்பாளையம், அத்தியடித்தெரு, மகா-ா-ா-ஸ்ரீ புலவர்
காதர் முகையிதீனவர்கள் குமாரர்
அருள் கவி புலவர்,
செய்யது முகையிதீனவர்களியற்றிய சாற்றுக்கவி.

வெண்பா.

மூலப்பெருளான முப்பொருளைத் தானறிந்து
ஞாலந்தனி லஹமதானவர்மேல்—சிலமுடன்
பக்தி நவரஸக் கீர்த்தனமா மஞ்சரியை
முத்துக்கனி யுரைத்தான் முன்.

திருநெல்வேலி தெற்குப் புதுத் தெரு, மக-ா-ா-ஸ்ரீ
நாராயணக் கவிராஜரவர்களியற்றிய சாற்றுக்கவி.

வெண்பா.

அன்பர்க் கருளு நபியாண்டவன்மேற் பைந்தமிழால்
மன்பதைக ளுய்யும் வகை நாடி—இன்பரச
மெத்தக் கனிவு தரவே கீர்த்தனந் தொகுத்து
முத்துக்கனி தந்தான் முன்.

திருநெல்வேலி தெற்குப் புதுத்தெரு, மகா-ள-ள-ஸ்ரீ திருப்பாற் கடல் நாதன் கவிராஜரவர்கள் குமாரரும், மகா-ள-ள-ஸ்ரீ நாராயணக் கவிராஜர் அவர்கள் மாணவருமான, மகா-ள-ள-ஸ்ரீ

காசினிவேந்தக் கவிராஜரவர்களியற்றிய சாற்றுக்கவி.

வெண்பா.

சீரார் நபியினருட் சிந்து படிந்தன்புடனே
பாரோர்களுய்யும்படி கருதி—நேராக
நத்தும் நவரச கீர்த்தனத்தை நல்கியதே
முத்துக்கனியாமுகில்.

முகவுரை.

நபிநாயகம் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் பேரில் பாடிய

தொண்டிச்சிந்து.

ஆதிதன் னொளிவதனுல்-பூரண-வகமிய ஞானமறை நூலின ராய்-மாதவ வடிவமுமாய், மதிப்படங்கா-மாற் றதிக ஜோதியுள வங்காரமுமாய், சாதுக்களுவந் தேற்றுக்-கருணாகர-தாயகமு மாய் நபி நாயகமுமாய், முன்கண்ட பார்வையது போல்-பின் னுமே காணு-முத்தி தரும் லாஞ்சினையு முடையதுமாய், காத வழி கஸ்தூரி மணங் கமகமென-கார்க்குடை நிழற்றும் பெருங் காரணமுமாய், அடிதோயா பாதமுமாய்-நிழல் சாய்கை-அறுவ ளவுமிலாத அன்புளோருமாய், அப்துல்லா நுதலிடத்தே-சில

நாளிருந்-தாமினம்மாளின்றெடுத்த அற்புதமுமாய், காரணக்கட-
லாக புருகான் வேதங்-கழறித்தீன் கம்பக்கொடி நாட்டியது
மாய், அன்பருக் கன்பருமாய்-நம்மவர் பிழை-யகற்றி அக்கரை
சேர்க்கும் வங்கமுமாய், சங்கை பொருந்தி யிலங்கும்-குறை
ஷிக்குல-சாந்தகுண தயாள ரட்சகருமாய், அன்னையாமீனு
ரின்ற-சிகாமணியார்-யகிலமெங்குஞ் சொலிக்கும் சுடர்மணியாய்,
ஜெயம் ஜெய மென்றுதித்த-ஹபீபிரசூல்-சேவடி நிதம் வணங்
கிச் சேவித்தடியேன், ஞானமின்ன தென்றறியாச்-சிறுவனிந்த-
நவரசக் கீர்த்தனமஞ் சரியென்பதை, பற்பல மெட்டுகளினு-
லமைக்குமிந்த-பையல் முத்துக் கனிக்கருள் செய்யும் நபிமேல்,
செந்தமிழாற் கீதம் பாடி-அச்சினிலிட்ட-செய்தியை யறிந்து
கொள்ளும் தீனவர்களே, ரிஜிஸ்டர் காப்பிச் சொன்னேன்-புஸ்
தகமொன்று-நியாயவிலை யாறணுக்கா நிகழ்த்தினேனே, அன்
பர்களே வாங்குவீர்காள்-கல் லூற்றூல் வெகு-ஆகம முறைது
லங்கு மதுவு மன்றி, அகமிய மிகவிளங்கு-மகத்துள்ளே நட்-
மாதியிற சூல் கிருபை யது முழங்கும், ராக தாள நிச்சயங்
காணு-மகத்துவமாய்-லாவணி டப்பா டோமரி நன்றாகத் தோ
னும், விந்தை யொடு சிந்து மறிவீர்-திருப்புகழும்-விஸ்தாரச்
சுரங்கள் போடும் விதந் தெரிவீர், தில்லானு வெல்லையறிவீர்-
வர்ணங்கள் பாடுந்-திறமை யதுவுங் கூடுந் தேர்ந்துக்கொள்வீர்,
வாழ்வொடு பறக்கத்து முண்டாம்-மென்மேலுங் கல்வி-வாய்த்
திட மஹ்முதருள் செய்திடுவர்காண், இதுதான் முகவுரையே-
வாங்குவோர் கென்று-மேகனருளாலறிவீர் முதுமறையே, இது
தான் முகவுரையே.

இலாஹி.

காப்பு-வெண்பா.

முத்திதரு ஞான முகம்மது றசூலுபய
சித்திரஞ் சேர் பொற்பதத்தை சிந்தித்து—நித்திப்பாய்
வல்ல நவ ரசக் கீர்த்தனமா மஞ்சரியை
சொல்லவிறையோனே துணை.

ராகம் ஸ்ரீ தாளம்-ரூபகம் திரிலோகமென்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அகிலம் புகழ் மதினாவி லென்னாளு—வாழும்
ஆளு முஹம்மதே. (அகி)

அநுபல்லவி.

மகிமைப் பிரகாசர் வறுமைதீர்த்திடு நேசர்
மாதா—பிதா—வேதா முஹம்மதே (அகி)

சரணம்.

காணிற் சுரமேலாய் தகை காணப் பொறுக்காத வண்ணம்
தானேன்றிரு தூதர் பார்செப்பிட தமதொட்டகங்காற்றெட்டிட
குமிழ் நீர்வரச் செயுங் காத்திமே (அகி)
வானோர் முதற் ஜிபுறீல் மிக்காயில் வஹியோதிடு மகிபா ஜெக
தீனோரை மஹுஷறிற் காத்திடுஞ் சித்தர் கலைத்திய தாசிமே
முத்தாக்கனிக்கருள் ஹாசிமே. (அகி)

ராகம் அடாணு-தாளம்-ரூபகம் முருகன் திருமால் மருகன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நீனோர்களென் றியம்பிடத்தகுமா அந்தத்
தீன்முறையை யணுவேனுமுணராமல் (நீனோ)

அநுபல்லவி.

தானேனுரைத்திட்ட முது மொழி
தன்னையறியாமற் சுன்னத் ஜமாத்தென்னுங் (நீனோ)

சரணம்.

அவ்வனுத்தீனி மஹறிபத்துல்லா வென்
றுகமத்தைப்பாரும் அது
வெவ்வையுமாண் டளிப்போம்திரு தூத
ரிசைத்தாரிந்தவாறும்
பவ்வமகற்றிட வே விது மந்திரம்
பார்த்தறிவோர்க்கருள் மிக்க சுதந்தரம்
செவ்விய தீனுக்கிது நல்தொபரந்
தெரியாதுள மறியாமலே
குரைஷிக்குல மெனவே சிலர் (நீனோ)

தன்னை யறிவது தான்பறுலாமென
சாற்று மொழி தேர்ந்து உன்
றன்னை யறிந்து வணக்கஞ் செய்தாற் காமிற்
றுனென்பர்கள் வாய்ந்து
தன்னையறிந்தால் முன்னேனை யறிவானெனன்
றுதி நபியோற் றதீதிலகைந்திட்ட
தின்னதென்றே அறியாமர் மதி கெட்ட
இனேனோர்களுஞ் செய் கென்றே
மொழிவா ரிஸ்லாமென்றே (நீனோ)

சுத்தசை தன்னிய மான பழம் பொருள்
சொந்தமென்றே நாடு கிற
ஞூலே சர்வாத்ம மெஞ்ஞானமதாய் வந்த
ஞூக்ஷியமதைத் தேடு
நற்றவஞ் சித்திக்கு முத்திதருந் திரு
நாயகராமகு மூதருரைப்படி
பக்தர் நகர் வளர் முத்துக்கனி சொன்ன
பத மெங்களுந் துதி பெற்றிட
ஹத நம்பிகோ னருளுற்றிட (நீனே)

சடை மறைத்து மகுடம் வைத்த என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

மான்மதங் கமழு மஹ்மூது நாதா—பூவின்
மாதவமாய் வந்த விறையோனின் ஆதா
கோதறுங் குறைஷியர் குலத்தின் வேதா—குவை
வீது மருகராய்க் களிகூறும் போதா
நிதம்—குற்றமிலாதருள் வீரோ
குத—ரத்தொளிவாகிய பீரே
புவ—னத்தினுக்கோர் குடையோரே
பதம்—நிதம்—தரு வீரே (மான்மத)

தந்தை தாயும் நீரேயல்லாற் றஞ்சமேது—இந்த
தாரணியிற் வாது செய்வது தகாது
மூந்தவொளி விற்றெளிந்த மகுமூது—நபி
மூஸ்தபா றசூல் சல்லல்லாஹு—வென்றோது
திரு—முத்திரையைத் தரித்தோராம்
கவி—முத்துக்கனிக்கருள்வோராந்
தீன்—வெற்றிகொளச் செயுமோராம்
ததி—கதி—தரு வா ராம் (மான்)

கலிலோஹரி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சலியா துமதடி மலரிணை தர
தருணைமென் மஹற்மூதே—சமயமிதே (சலி)

அநுபல்லவி.

நுலேயாத துயற்கெட வருளிடுந்
துறைமகு மூஹிதிறையே—விதுதநிபே (சலி)

கலிமாவெனும் பொருளறிந்தவரவோ
ஹக்கனுக்கடியார்கட்—டிடணுவார்கள்
அலிமா முலே யமுதருந்திய நபி
யருளியதாராய்க்தே—அகமகிழ்ந்தே (சலி)

உமையே சதமென வணுதினமு நல்
லுண்மையா நம்பினேனே—என் கோமானே
எனையாள மனமதில் மகிழ் கொடுத்
தின்பவசமீவீர்—சுகமருள்வீர் (சலி)

கருணுகர முதல்வ சுகிர்தமொடு
காப்பதும் கடனுகும்—நலம் பெருகும்
வருவீரே சிறுவன் முத்துக்கனியின்
மதுரித முறை கேட்டு—மனதிலுற்று (சலி)

ராகம்-ஆனந்த பைரவி-தாளம்-ஏகம்.

பராமுகமேனையா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சிந்தையிறங்கியாளுஞ்—சேயனை நாளும் (சிந்)

அநுபல்லவி.

நந்தா வனஞ்செறிந் தானந்தங் கொளு மதின
சந்தோட மாயரசாளுந் தாஹா வென்னு மகு
    மூதா முதல் வன்றிரு
    தூதா வானோர்கடொழும்
    பாதா பக்தர்க்கிறங்கும்
    நீதா கடைக்கண்ணோக்கி (சிந்)

சிருட்டினை தீனவர்க் காருதரப்பொருளாய்
நேராய் வந்தருளும் குபேரா நபிகள் பெரு
    மானே கானில் மானுக்குத்
    தானே பிணையாய் நின்ற
    கோனே அந்தரமேழுந்
    தானேரிய சீமானே (சிந்)

சுந்தரமாயுதித்த இந்து வெனப் பகருஞ்
சந்ரவதனமுற்ற விந்தை நபி பதத்தைச்
    சொந்த மெனவெண்ணிய
    னந்த மெடுத்துரைத்தா
    னந்த முடன்றுதித்தேன்
    சந்த தமு நபியே (சிந்)

மாசற வெண்ணி யதிநேசமதாகத் துதி
தாசரைக் காக்கு மயில் வேசர் நபி யென்னுளும்
    வந்து முத்துக்கனியு
    கந்து நம்பாதமலர்
    தந்து சுகமுறவ
    ணைந்து வணங்கிடநஞ் (சிந்)

காக்ஷிக் கண்காக்ஷியே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பாதார விந்தமே பற்றுவோர்க் கானந்தமே (பாதா)

அநுபல்லவி.

மேதாவியான மஹ்மூதிரசூல் நபியின் (பாதா)

சரணம்.

ஆதார மும்மையன்றி யாரெனக்குக் கூறுமே
ஆகம முந்தெரிய தேஜையைத் தற்காருமே
வாதாகச் செய்யும்ப பவ மாற்றியருட்டாருமே
வல்லகுதாவைத் தொழு தேற்றித் தினந்தோறுமே
மாகவிமாப் பொரு ணிலை நாட்டு—திரு
மாமஹ்மூதானவர் சொற் கேட்டு—மத
மோக வினைதீர்க்க விதைப்பூட்டு—நல
மோட்சந் தருமௌன வொளி காட்டு
முன்னிறையைக்கண்டோர்
மூதுரை மொழி விண்டோர்
நன்னெறி நவின்றோர்
நசருக்களை வென்றோர் நபி (பாதா)

அமாவாசையில் மதியழைத்து மேகச் செய்தவர்
அப்துல்லா நுதவிருந் தாமினரிடஞ் சென்றவர்
செம்மையாக வேங்கையொடு சேர்ந்து வசனித்தவர்
செம்மல் மஹ்மூதாய் வந்து தீன் பயிர் விளைத்தவர்
தேசமெங்கும் போற்று மறைத்திருவே—மண்ணிற்
றிவ்யபாதந்தோயா நடைக் குருவே—காதம்
வாசம் வீசிடுங் கற்பகத்தருவே—மண்ணுல்
வாது செய்வோரை யடக்குமருவே

மாற்றடங்காப் பொன்னே
மதிஞு வாழு மன்னே
முற்றுணர்ந்து யான் சொன்னேன்
முத்துக்கனியின் னன்னையான நபி (பார்தா)

பாலாபிஷேக வடிவேலா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அப்துல்லா வரனவர்க ணெற்றியிலே சிலநாள்
முத்தாயிருந்த பொரு—ளாமினுவாயி
றற்றத் திரண்டதரு—ளது
ஆதியிறையோனருளாற் கோதற விளைந்து மத
ஞகமத்தையும் பரவ பூதலத்திலேயுதித்த
அற்புத ஆத்ம குரு—காமா நல
மெய்ப்போடு வந்த திரு

தொகையறு.

அஷ்டதிக்கோர் போற்ற மட்டடங்காப்புக
ளணிந்த தாயகமுநீரே
அகிலமதிற் புருக்கானு லலி வேதம்பரவ
அருளிய நாயகமானீரே.

(முடிக்குச் சரணம்.)

என்றாய் பிதா குரு நீ ரென்றே மனத்திலெண்ணி
வந்தேன் மறை நாதரே—மாசிலா
சுந்தர மகுடதரே—நரை
மாமணக் குங்குங்குமமுங் காத வழி பொங்கி மலிந்
தேசிறப் புதங்கமிக ஆர்வரிக்குஞ் சிங்கமெனும்
ஆசிங் கிளை நபியே—முத்துக்கனி
பாசங் கொளுங் கனியே.

மருகேலரு என்ற வர்ணமெட்டு.

ராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

எனக்கோர் துணை நுந்தாளினை (எனக்)

அநுபல்லவி.

புனத்தில் ஜலத்தை பொங்கிடச் செய்தோரே
புண்யாப்துல் முத்தலிபு பேரனே (எனக்)

சரணம்.

அன்னையும் பிதாவு மாசானுந் தெய்வமும்
அம்புவியிலின்ப மளிக்குஞ் செல்வமும்
நன்னயமாய் நீரென் றெண்ணியே மென்மேலும்
நத்தினேனருளே நல்குவீரென்னாளும் (எனக்)

பக்தர் தொழும்பாதா சித்தர்போற்றும் நீதா
பத்தினியாமினர் பெற்றிடும் பிரக்யாதா
உத்தமமாகவே இயற்றினேன் தற்போதா
முத்துக்கனிபோற்று முஹம்மதென்னும் வேதா (எ)

தாதர்பாய் என்ற வர்ணமெட்டு.

ராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

பாரீரோ பக்தரைக்கண் (பாரீரோ)
பண்பா நும்பதம் இன்பாய் நம்பினே[illegible] (பாரீரோ)

அநுபல்லவி.

தாரக நீரல்லாதி தாரணி மீதிலே[illegible]
தற்பரனேடுறை செப்பிய புண்ணிய
சிற்பனராய்ந்துள மெச்சிய கண்ய[illegible] (பாரீ)

தொகையறு.

தேசாதி ராஜாக்கட் டினந் துதித்திடு மெங்கட்
செம்மல் மஹ்மூது மேரோ
ஜெகமதிலடியவர் துயரறப் பார்த்தருட்
செய்து மென்மேலுங் காரே.

சித்தர் துதிக்கும் சிங்கம் முத்துக்கனிபோற்றுந் தங்கம்
சீத சற்குண மாதவக்குரு வேத நற்குண சூதக்கண் (பாரீ)

எப்புடு கிருபாகைலு என்ற வர்ணமெட்டு.

ராகம்-முகாரி-தாளம்-ஏகம்.

பல்லவி.

இன்னமும் பாராமுகமா இருப்பதுவும் நியாயமா (இன்)

அநுபல்லவி.

அன்னை தந்தையு நீரே அருள்புரிவீரே
நன்னய மதிஞரே நன்குடனுளமென்பீரே (இ)

சரணம்.

யேதேது செய்தாலு மீன்றவர்போலு
தீதாப்பொறுத்தாளுஞ் செம்மல் மஹ்மூதே மேலும் (இ)

மானும் பொட்டை முதல் வசனிக்கும் புண்ணியரே
நானிலத்தின் நற்கலிமா நல்கிடுங்கா ருண்ணியரே (இ)

நித்தமியற்றிந் நூலே முத்துக்கனியின் பாலே
சித்தமகிழ்ந்தருட் செய்யுமஹ்மூதென்மேலே (இ)

பாயுதே என்ற வர்ணமெட்டு.

ராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜல்திபோ—அபு—ஜஹிலே யுனது எண்ண
முடியாது விட்டு வெகு (ஜல்தி)

அநுபல்லவி.

அல்லலுளதை மிக நல்லதெனவே யெண்ணி
தொல்லைப்படுத்துக்கெட்ட சூமனே—அப்பால் வெகு (ஜ)

சரணம்.

வஞ்சத் தொழிலை மிகத் தஞ்சமென்றே யடையும்
பஞ்சபாதகமுள நெஞ்சகனேலானே விரசு
வின்சொற்படி நடந்தே அஞ்சலித்துச் சுவன
மிஞ்சியடையாப் பெருங் கஞ்சப்பயலே வெகு (ஜல்தி)
நேமமுடனே நபி சாமூரிடை வர்த்தகந்
தாமே செயுங்கால் பெரும் பாபசர் நீங்குறச்செய்
தீமை யனுவத்துகிடாமற் கரமறுந்தே
யேமறக்கரம்பொருந்த க்ஷேமமாய் செய்தோரிடம் (ஜல்தி)
கத்தோனுரைத்த மொழியைத் தெரிந்தேயியற்றும்
முத்துக்கனிக்கிரங்கி நித்தமருளு நபி
சித்தமகிழ லாயிலாஹா இல்லல்லாஹு வென்
றுற்றமுஹம்மதிரசூலுல்லாஹி யென்றும் (ஜல்தி)

வா-வா=வாவெனக் கூவியழைத்தாலென்ற வர்ணமெட்டு.

ராகம்-சுருட்டி-தாளம்—ஏகம்.

பல்லவி.

நா—நீ—யிரண்டென நாடியலைந்ததினால்
ஞானமுண்டோ மனமே—கதி
தானுமுண்டோ தினமே (நா—நீ—யிரண்)

அநுபல்லவி.

தானைத் தலைவனைச் சதுர்மறை யொளிவாய்
தாரணி முழுதும் பாவியதொன்றது
தானல்லவோ—நம்
கோனல்லவோ (நா—நீ—யிரண்)

சரணம்.

கருத்துடன் மனத்தை திருத்தி நின் சினத்தை
துரத்திடிலதுவே பொருத்தமாய்க் காட்டிடுங்
காரணமே—பரி
பூரணமே (நா—நீ—யிரண்)
காடு மலை செடிகளோடி புளன்று சிலர்
காணுதலைந்தோமெனும் வீணைச் சலித்து மனம்
காய்ந்தனரே—மிக
ஓய்ந்தனரே (நா—நீ—யிரண்)
கத்தோனின் தூதர் நழிசொற் படியுரைக்கு
முத்துக்கனிக்கு மருணித்த மளிக்கு மகு
மூதானோரா—மக
மீதானோராம் (நா—நீ—யிரண்)

ராமபஜன ஹோதிய என்ற வர்ணமெட்டு.

ராகம்-தேசிகமுகாரி—தாளம்-ஆதி.

பல்லவி.

அஞ்சினி லொன்றையறிவீ—ரத புடனே (அஞ்)

அநுபல்லவி.

வஞ்சங்கசடகற்றி பஞ்சபூ தத்துளாய்ந்து
கொஞ்சுங் குயின்மொழியைப்பார்—குறிப்புடனே (அஞ்)

சரணம்.

நாணமுவிட்டே அவ மானமுற்றசிலர்கள்
தீனோரென்றே விழம்புறீர்—திடத்துடனே (அஞ்)
கலிமாப்பொருளதென்ன கருத்தொடு விண்டதென்ன
அலிமா மனோரென்பதுங்கே—ளகத்துள்ளே நீ (அஞ்)
ஆதியிறையை நிதம் ஓதி யுணர்ந்து தொழார்க்
கேது நற்சுவனபதி—என்றேங்கி நிதம் (அஞ்)
தண்டலை சூழ்மதினா தாஹா நபியரைந்தார்
தொண்டன் முத்துக்கனி சொலு—சுருதியுணர்ந்து (அஞ்)

தக்கபாராங்கல்லைத் தூக்கி என்ற வர்ணமெட்டு.

ராகம்-கல்யாணி.

ஆதியருளின் தீனோரே நம்ம
ளண்ணல் முஹம்மதை நீரே மனு
நீதியுடன் போற்றுவீரே துன்பம்
நிச்சயமாய் மாற்றுவாரே (ஆதி)
சக்ருத்துற்றிடும் போது எங்குந்
தப்பிக்கொள்ள முடியாது பெண்டு
மக்கள் பொருள் முன்னில்லாது மற்ற
மந்திரங்களுஞ் செல்லாது (ஆதி)
தற்க விசாரணைக்காலம் சிருத்
தல்முஸ்தகீமென்னும் பாலந் தன்னில்
ஊக்கங்கொண்டே ரனுகூலம் செய்வோ
ருய்யாவிடிலலங்கோலம் (ஆதி)
பூவினிலாசை பொல்லாது நல்ல
பொற்பதி சேரநில்லாது கெட்ட
தீவிரக் கோபஞ்செல்லாது உங்கள்
ஜென்ம மீடேறுவதேது (ஆதி)

முத்திபெரும் வழி நாடி கவி
முத்துக்கனி தமிழ்ப் பாடி நபி
சித்தங்களிப்புறத்தேடி சொற்கம்
சேர்ப்பார் வல்லோனை மன்றாடி (ஆதி)

மானிடமென்று வந்தோரே என்ற வர்ணமெட்டு.

(ஆனந்தக் களிப்பு.)

பூதல வாழ்வது சதமா தேடும்
பூஸ்திதி யுனக்கொரு துணையாய் வந்திடுமா
ஞானமில்லா மட மனமே கேளாய்
நானெனு மாணவந் தானவ குணமே
என்றறியாத நெஞ்சகமே பிறப்
பென்னு மொழிக்கிதுவே விரை நிசமே
அல்லலென்றாய் வது தகுமா யாது
மவனசையாமலே அனுவசைந் திடுமா
தூங்கும்போ தேங்கிப்போங் காயம் நில்லா
தொழியுமென்றே முன் நூல் கூறுவுபாயம்
தாமே தேடாது விரைந்து கெட்ட
தையலர்களையுந் தெய்வமாய்ப்பணிந்து.
சிந்தை மகிழ்ந்து வந்தோர்ந்து பாவம்
செய்கிறோ மென்றெங்குந் தேடியலைந்து
பந்தபாசக்கடலதிலே மூழ்கி
பரிவோடீன்ற மக்கள் பல வுரவினர்கள்
மாடாடு பொருண்மனை யெல்லாம் நமன்
வந்திடும் பொழுதினிற் சந்தையினுறவாம்

ஆண்டவரிப் போன்றிரு வந்த தனை
யாடு மிச்சடத்திலுக்கேயிது நிதம்
என்றோர் நினைப்புற்ற சாது சங்கத்
தின்பமுடன் வாழ்வர் துன்பமில்லாது
உற் றிரசூலே நீ நாடு கனி
முத்துக்கனி சொன்னேன் பக்தியாய்ப் பாடு (ஆகல)

முகமதியர் குலத்திலென்ற வர்ணமெட்டு.

சிந்து.

மானில மெங்கும் புகழ் ஞான தீபமா யொளிர்
வள்ள லிரசூல் பெருமை—தனை யெடுத்து
விள்ளுவதென்றாலருமை

மானோ டினியுரை தானே மொழி பவர்
கானே நதியனைத் தனைவோர் பருகிட

வாக்குரைத்திட்ட நாயகம்—ஜெகமுழுதுங்
காக்குங் கருணைத்தாயகம் (மானில)

தேனார் பொழியுமதி னூநகர் மீதிலுயர்
செங்கோல் செலுத்து நாதர்—தீனுல் இல்லா
மெங்கும் பயிற்றும் வேதர்

தீதாரிடானு காதோடிட யிறைபெதா
வருளென வாதாடிய நபி

செம்மலர் பாதம் பணிவோம்—பக
முண்மையாய் ஓதிப் புகழ்வோம் (மானில)

ஹாஷீங்குலக்கனியாய் மாசறத் தீன்பயிர்ச்சி
ஆக்கும்படிக்கென் றுதித்தார்—ஜிபுரீலேவல்
கேட்கும்படிக் கென்றடுத்தார்
ஆரணாரம்பறி பூரண மாகிய
காரணராய் மணங் காதமுலாவிய
ஆதி யொளியினுற்றவர்—அஹ்மதென்னும்
நீதியாய் நாமம் பெற்றவர் (மானில)

எல்லாவுலகும்படைப் பெல்லா மமைத்தருளும்
வல்லோனளித்த தூதர்—சுவர்க்கபதிக்
கெல்லை யெனும் பொற்பாதர்
இகபரமுஞ் சுகமருளிய கற்பக
திரு சரணப்பதமிசை விரைந்தித் தொழ
ஏகுமிடமைகளற்றே—வல்வினையோடி
போகுமன்பர்களுக்கின்புற்றே (மானில)

மாதின் தசைக்கட்டிடை சோதிம்பெண்ணைக்கி யிந்த
மானிலந் தன்னிலமைத்தார்—அபூஜஹ்லீனும்
நாணங்கொண் டோடி யொழித்தான்
வல்லிய மோதிடு முள்ளமை நாதரே
தெள்ளமுதே திரு வல்லவன் தூதரே
மாதவரோது நீதியே—என்றென்று நமக்
காதர வென்று நீதியே (மானில)

நாற்றிசையும் பெருக்காய் மாற்றலர்சூழும்பதூர்
பார்த்தொரு மண்பிடிவிட்டார்—கோடிஜனமுந்
தோர்த்தோடி நொய்துமேகெட்டார்
நாட்டமுடன் கலிமாவுரை பூட்டிய
தாஷ்ட்டிகரா மஹ்மூதருள் தேட்டமாய்
நத்திக்கொண்டானந்தம்பாடும்—முத்துக்கனிக்கு
நித்தமும் வாழ்வது கூடும் (மானில)

முகம்மதலி சௌக்கத்தலி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஆதியிலுண்டானதொனி யறிந்திடுமென் னெஞ்சே
ஆலமதிற் புரிந்த தகமியமென்றெண்ணிக் கொஞ்சே
ஆகாயமாய் வெளியி லந்த யோகக் கருக்குழியில்—வந்
தமைந் தொளிகுன் னென்ற—சத்தம்
மானதெனக் கொஞ்சே (ஆதியி)

பண்புடன் பயக்கூனை பான்மையறியாயே—அது
பண்டுளோரிசைத்த நூலை பார்த்தறிவாய் நீயே
பல்லாயிர மமைப்பு மற்றெல்லாவித படைப்பு—மிக
பதமுட னென்றென் றெனவே நிதமும் புகழ்வாயே (ஆதியி)

கருவோடுறவாய் நினைவு கலந்தது காரணமே—அது
கனவிலதிலே துணிவு கண்டிடு பூரணமே

கண்டுகளிகாக்ஷி ஜெயமென்று முறுந் தேர்ச்சி—மடக்
கஞ்சன்தூழ் குணத்தை வெறுத் தஞ்சலியாரணமே (ஆதியி)

மறதி மௌனத்தென்று மொழி மகாறகளிற் கூறியதே—நின்
மன நினை ஹறயாத்தெனும் மார்க்கங்கள் வழுத்தியதே
மவுனமாக விருப்பாய்—வேறு
கவனமதை வெறுப்பாய்—உன்
மனத்திடத்தால் கனமுண்டென
மகுமூதர் சொல்லியதே (ஆதி)

கருத் ததனைத் திருத்தி கருவி நினைவைப் பொறுத்தி—மனம்
கருதித் தினந்தோறுமந்த கல்பதினி விருத்தி—மிக
கலக்கமிலா தெளியே கண்
புருவ மத்தி வழியே தினங்
கங்குற் பகலாக கண
நினைவாய்த் தூங்கி விழியே (ஆதி)

முத்திகொடுத்தாள்வதற்கு முன்னுதித்த கோவே—எம்.கே.
முனைகதீன் பிச்சைக்கே கிருபை முற்றுங்கொடு தேவே
மூவாசையை ஒழியே மகு
மூது மூலச் சுழியே நல்ல
மூமினை பேரையென்று
நினைவாய்த் தூங்கி விழியே (ஆதி)

சாமி விவேகானந்தா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வானோர் தொழு—நீதியே—மற்றுமெதென்னபியே (வா)

அநுபல்லவி.

வதன ஜோதி சுகுண நீதி வரைய பூவெங்கணுநற்கியாதி (வா)

சரணம்.

ஞானோதயாபரமே தீனோர்க்ருபாகரமே
நற்சுகமே

ஈட்சிக்குக் கற்பகமாய் முச்செகத் தற்புதமாய்
தாட்சண்யத் தெய்வீகமாய் ஜென்மமுற்றோர்
மதமூதாணி ஜெகமீதின்ப மறைகளோதித்
தயவோடுய்த (வானோர்)

சந்ததமும் பணிந்து செந்தமிழாய்ப் புகழ்ந்து
சாற்றி வந்து

தாளடியே துதிக்கு மேழை முத்துக்கனிக்கும்
சாயுச்ய மேயளிக்குந் தாஹா நபி
தர்மமா மெவ்வுலகும் போற்ற அருமை
யோக மகுடம் பெற்ற (வானோர்)

சுதேச முகமதலி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

செந்தா மரைப்பதமே தந்தாளுவீர்ஜிதமே
கந்தங் காதம் வீசுமே ஹாஷிம் நபியே நாளுமே

அநுபல்லவி.

முந்த ஒளிவிலுற்றோர் மோன மயில் ரூபம் பெற்றோர்
பிந்தமுதுமலையிப் பேறுலகெலாம் பயிற்றோர் (செந்)

தொகையறா.

அந்தரமேழ் வானமுங் கடந் திரையோடு
ஆகம மொழி நவின்றோர்
அருஷ் குருஷ் லௌஹு பாதாள வான் புவி கடலும்
ஆதி மற்றமுத றென்றோர்
தினமகிழ்ந்தே துதிக்குஞ் சேயன் முத்துக்கனிக்குந்
திருவடி மலர்ப்பத மெனக்கிடுங்
குரு நபி முஹம்மதரி னற்புத (செந்தா)

வரக்கண்டேன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

போற்றினேன்—பணிந்து—போற்றினேன்
துணிந்து போற்றினேன்—மகிழ்ந்து—போற்றினேன்

நாற்றிசையும் புகழ் கீர்த்திமதினவி
நேர்த்தியுடனாளுங் ஹார்த்திநபி பாதம் (போ)

அநுபல்லவி.

மாற்றலரை ஜெயித்த பூர்த்தியாய் தீனுற்றுரை
யேற்றித் தொழுவோர்க் கின்பம்
ஈயும் மகுமூதர் பாதம் (போற்றி)

முத்தர் துதிக்குஞ் சிங்கம்
பக்தர் போற்றிய தங்கப்
முத்து முகம்மதரை முத்துக்கனி நத்தி நித்யம் (போ)

காந்திமகான் போலுண்டோ என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

தர்ம வேந்தர் நபியைத் தொழும்—பாவமோசனமே
ப்ரயோசனமே
சுயாசனமே

தர்ம வேந்தர் நபியைத்தொழும்
வாய்ந்த மதினு—வாழும்வதனு
மாசிலாப் பொருணீரே
மகாமேரே

சுகச் சீரே
அருள் வீரே—தினம்
வணங்கிடுமடியோரை—யக
மகிழ்ந்திட செயும்பீரே—கானின்
மானின்புற வேயன் பொடு
வேடன் பிணையாய் நின்றிடு
மாதா—மறை—நாதா—சதுர்
வேதா—மஹூதரான (வேந்தர்)

ஞான கெம்பீரா நான்மறைத்தீரா
நண்பர்க்கு முபகாரா
சுகுமாரா
நல்லுதாரா
நற்கு பேரா—யொழிர்
நங்கையாமீனர் நேரா யீன்ற
பங்கயப் பதச் சீரா உமை
நத்தும்—பயல்—முத்துக்கனி—சித்தங்
களி—ப்புற்றித்ததி
நாடி—யருள் தேடி—பதம் பாடி
விரைந் தோடி வந்து (வேந்தர்)

சுயருச்சிய மதிகதூர மென்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

பாரோர் புகழும் பயகாம்பர் திருநபியின்

பாதம் பணிந்தவர்க்கே பரகதியாம்
சீரார் மதினா நகரூரா ளரசரெனும்
ஜெம்மல் முகம்மதரைத் தினந் தொழுவாம்
வஞ்சப்ர பஞ்சப்புவி வாழ்வைப் பெரிதென்றெண்ணி
மார்க்கமதுக் கிடர்செய் மடப்பதர்காள்
கெஞ்ச நமதுயிர் கொண்டேகிட முன்க்கர் நக்கீர்
கேள்விக்கென் சொல்வீர் கெட்ட தடிப்பதர்காள்
அஞ்சுமாறு மதியாதாக மழுங் தெரியா
தலைந்து இஸ்லா மென அலைகிறீர்காள்
முன்சொல் முஹம்மதரின் முதுரையைத் தெரிந்து
மோக்ஷகதியடைய முழங்குவீர்காள்
சதுர் மறை நவ நீதர் தாஹா நபியமைந்தரர்
தகவல் தெரிந் துரைத்தேன் தாரணியில்
முதியோனருளால் கவி மொழிந்த முத்துக்கனிக்கு
முற்று மருளு மஹ்முதவர்தான் (பாரோர்)

கண்ணபிரான்னென்னவே என்ற வர்ணமெட்டு

பல்லவி.

ஆதி மஹ்மூதர் கலீ மாவசைகு வோசோ—முனி
வீமாயுள்ள பேரே—நம்ம
ளாண்டவன் சொற் கட்டளை யறிந்து தொழுவீரே

வாது செயுங் கோள்ளிபுலீசின் செய்கையாமா—பெருந்
    தீதாராமற் போமா—திரு
வள்ளலை யோர் நிமிட மறந்திருக்கலாமா

அஞ்சு நேரமுந் தொழுவோர் நெஞ்சின் மிகவருளாம்
    அது—ஆகமத்தின் பொருளாம்—அதை
அனுசரித்துத் தொழுதிடாதா ரைம்புலன்களிருளாம்

புசைப் புவி வாழ்வை நிதங் கொஞ்சி மகிழ்ந்தோமே
    பொருள்—மிஞ்சித் தேடினோமே—நம்மைப்
படைத்த குதா கேட்கும்போது பதிலென் சொல்லுவோமே

இட்டமில்லா மட்டிகளா வட்டி வாங்கலாமா
    நம்மவர்—சட்டப்படியாமா—கொடுந்
தீயரே நன் ஜென்மத்திலுந் திகை விட்டுப் போமா

எப்பிழையும் இஸ்தக்பார் செய்யில் பொறுப்பேனென்றான்
    ஏக—றப்பு மொழிகின்றான்—வட்டி.
வந்திக்கையில் வாங்கும் பிழை யான் பொறுக்கேனென்றான்

ஒப்புவமை யற்றான் மொழி ஹப்புடனே படிப்பீர்
    நோன்பு—மூப்பதையும் பிடிப்பீர்—யேழைக்
கோசிபனமுடை சதக்கா வுகந்து மிகக் கொடுப்பீர்

அன்னிய மாதர் பொருளிலாசை கொள்வதாகா
    இனி—மோசம்போவதாகா—திரு
வஹ்மதரின் குர்ஆன் மொழி யகன்றுவீணாய்ப் போகா

தலையிறக்கி முகமினுக்கி சைகையாக வுடுத்து
நகம்—சரிவரவே எடுத்து—டொப்பி
தலையணிந்து உடலின் ஜிப்பா சங்கையாகத் தொடுத்து

வீதிதொறும் யாமுஸ்லிமேன் மக்களென்றுரைந்து
கையில்—மிகு தஸ்பீகணிந்து—சிலர்
வெட்கங்கெட்டுத் திரிவார் ஹக்கன் றொழுகைதனை மறந்து

பற்பல கிளைவாய்த் தொழும் பாவிகளே வாரும்
மன—பக்தியோடு நீரும்—குதா
பாதந்தொழு மோர்மித்து நற்பதிசுவனஞ்சேரும்

ஆகமநன் னூலிலக்கணங் களறியேனே
குற—ளதுந்தெரியே னானே—கவி
யரைந்தேன் முத்துக்கனிக் கருள் செய் யாதிறஹ் மானே (ஆ)

பாறதமாதா பெற்ற என்ற வர்ணமெட்டு

எல்லா வுலகும்படைப் பெவ்வகையும் யீன்றி ரணம்
உல்லாச மாயளிக்கு முண்மையுளா னன்பினொளி
வாகி வந்தோராம்—செய்யி
தஹ்றமெதன்போராம்

சாதாத் ரசூலடியைச் சான்றவர்க்கு சாயுச்யமே
வேதாகமப்பொருளை விரித்துரைத்தார் நீன் விளங்க

மெய்க்கவிமாதான்—நல்ல
பக்குவமாய்த்தான்

லாஹிலாஹ இல்லல்லாஹு நாட்டடியதின் சேர்ந்தய்
ஓய்வில்லா முஹம்மதிர சூலுல்லாஹி யெப்போது
மோதச் சொன்னுரே—மன
நீதியாய் நேரே

அந்தரமேழுஞ் சென்று ஆதியிறைவைக்கண்டு
ஆனந்தமாய் மொழிந்த அதிசயங்கள் விள்ளுகிறேன்
ஆச்சர்யம் தோணும்—தீனேர்க்
காகவே காணும்

ஆதி யிறைகட்டளை ஐம்பதொருத் தோர் தினத்தில்
நேமமுடன் தொழுக நியமித்ததையுந் தெரிந்து
நீதியாய் யாறு—மாத
நோம்பெனக் கூறும்

பான்மை யறிந்து மிக பாடு பட்டு நம்மவர்க்கே
க்ஷேமமடையும்படி சென்றேழ் வானங் கொண்டிறையை
சேவித்து நின்றூர்—பல
பல செய்திகள் விண்டார்

அந்திமுதல் சிற்றெறும்பு ஆனவுயிர்க்கு பிரணஞ்
சித்தமுவந் தளிக்குந் தேசிகனே யென்னும்மத்தோர்

செய்யச் சக்தியில்லை—இந்த
வையகத்தில் தொல்லை

யென்று நமக்குதவி யெங்கள் ரசூல்மொழியை
நன்றெனவே மதித்து நற்கிருபையோடளைந்த

ஞாயமாய்த் தோணும்—உ
ருபாயமாய்க் காணும்

ஐம்பதொகுத் தைத்தொகுத்தா யாக்கிகிடை கேட்டதற்பின்
அன்போடு முப்பதுநாள்—அவசியமாய் நோன்பெனவே

அதும் விடை கொண்டா—ரரு
லகமகிழ் கொண்டார்

செம்மல் முஹம்மதருந் தீனவர்க்காய்ப் பாடு பட்டு
நன்மை பெருகச் செய்யும்—நாதர்மஹ்மூதர் பாதம்

நத்தினேன் யேனோ—முத்துக்
கனியுமிவ்வேளை

வனசாக்ஷி என்ற வர்ணமெட்டு

பல்லவி.

மஹரா சாது மறை நபி மஹ்மூது—மஹரா சாது

அநுபல்லவி.

வானவர் புகழும் ஞான சம்யகுண (மஹா)

சரணம்.

சகல வேத சன் மார்க்கத்தினரசே
சாந்த சற்குண தயாபரச் சிரசே
இகபரத்திற்கசு மருளிடும் கிரசே
ஹிதய பூர்த்தி—புட நற்சீர்த்தி
புருக்கா கீர்த்தி—பறைந்த வெற்றி (மஹா)

இந்துவந்து தொழு மெம்பெருமானே
இணையிலான் மாதர் விலங்குஞ் சீமானே
கந்தங்காத நறை கமழுங்கோமானே
கானகத்தே—நீரமைத்து
கீனை எங்குமே விளைக்க (மஹா)

நந்துவோர்க் கருளு நயகுண தீரா
நம்பு மன்பர்பவம் நசிக்குஞ் சிங்காரா
நித்தம் பாடுமுந்துக் கனிக்குபகாரா
நீதாய்துல்லா—தவத்தி
லேயுதித்து வேதமுற்ற (மஹா)

38

மங்களம்

ஆலமெங்குஞ் சோதி யமைந்திலங்கும் பரமே
அஞ்சலித்தனுதின மரைகுவோ மங்களமே

நாலா வேதம் பயின்ற நபி யெனுங் கர்ப்பகமே
நாழுந்துதித்தே வணங்கி நவிலுவோர் மங்களமே

சாலோக சாமீப சாரூப சாயுச்சியமே
தத்துவகுத் பாண்டகையை சார்ந்துவோ மங்களமே

மேலாய் நாகூரரசாள் வேந்தரேயற்புதமே
வேண்டியஞ்சலித்து நிதம் விள்ளுவோ மங்களமே

ஞாலம் புகழும் நாஷிமாம்க ளெனுந் திரமே
நத்தி நிதமுந்துதித் துரைப்போமே மங்களமே

சீலமுடனிக்கவி செய்யு முத்துக்கனிமேல்
தினமும் அருள் தருவாரென்று செப்புவோ மங்களமே.

முற்றிற்று.